**செய்தி வெளியீடு எண்: 13/09/2020** **நாள்: 29.09.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

**இந்தியாவில் முன்மாதிரியாக மின்தூக்கிகள் மற்றும் கழிப்பறை குழாய்களை காலால் இயக்கும் தொழில்நுட்பம் சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் நிறுவப்பட்டுள்ளன.**

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பல்வேறு மின்னனு தொழில் நுட்பங்களை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் செயல்படுத்தியுள்ளது. மின்தூக்கிகளில் கைகளை பயன்படுத்தாமல் காலால் தொட்டு இயக்கும் வகையில் நவீன தொழில்நுட்ப சாதனம் சோதனை முயற்சியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவன தலைமை அலுவலகத்தில் கடந்த மே மாதம் பொருத்தப்பட்டன.

இது சிறந்த பயனளித்ததை தொடர்ந்து 32 மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள அனைத்து மின்தூக்கிகளிலும் கைகளை பயன்படுத்தாமல் காலால் தொட்டு இயக்கும் வகையில் நவீன தொழில்நுட்ப சாதனம் பொறுத்தும் பணி துவங்கப்பட்டு நிறைவடைந்துள்ளது.

மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிலைய கழிப்பறைகளில் சுகாதார நடவடிக்கைகள் இருமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கழிப்பறைகளில் உள்ள தண்ணீர் குழாய்களை இயக்க கைகளை பயன்படுத்தாமல் காலால் இயக்கும் பொத்தான்கள் 32 மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள 190 கழிப்பறைகளில் நிறுவப்பட்டுள்ளன.

பயணிகளின் பாதுகாப்பை மிக கவனமுடன் உறுதி செய்யும் விதத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இந்த இரண்டு வசதிகளை இந்தியாவிலேயே முதல் முறையாக நிறுவியுள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**